**தலைப்பு – 106 - இடர் முகாமைத்துவ அமைச்சு**

--------------------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இடர் முகாமைத்துவ அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்களையும் உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் படி, இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கப்பட்ட விரிவான அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் படி, அமைச்சிற்கு உரித்தான வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் படி இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையைப் பிரதிபலிக்கின்றன என்பது எனது நோக்காகும்.

### 1.2 முனைப்பழயுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்களிப்பு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளிற்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிட்டபட்ட ஏற்பாடுகளிற்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு கணக்களிப்பு உத்தியோகத்தரினது பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம், அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதாக கணக்களிப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டியதுடன் அம் முறைமையின் ஆக்கபூர்வத்தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு இதன் படி, முறைமை ஆக்கபூவமான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஓட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள சமர்ப்பிக்கப்படுகையில் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான

சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்களிப்பு உத்தியோகத்தருக்கு தெரிவித்துள்ளளேன்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவினதும் 38 ஆம் பந்தியினதும் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் குறித்துரைக்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான தேவைப்பாடு இன்மையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கானவற்றுடன் இணங்கி உள்ளன எனக் குறிப்பிட முடியாதுள்ளது.

(ஆ) அமைச்சால் முன்னைய ஆண்டிற்கு உரித்தான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் தேவைப்பாடு இன்மையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் இவ் அறிக்கையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வருமானமற்ற பெறுவனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது அமைச்சின் 04 வருமானக் குறியீட்டின் கீழ் ரூபா 186,433,631 தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. எனினும், பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தர், வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தராகப் பெயரிடப்பட்டிராமையால் சேகரிக்கப்பட்ட வருமானம், வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக வருமானப் பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தராக இன்மையால் வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தர், வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தர் அல்லாத போதிலும் அமைச்சால் வருமானக் குறியீடு 4 இன் கீழ் வருமானம் சேகரிக்கப்பட்டு திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் தவறுதலாக இது நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானப் பெறுவனவின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், எதிர்காலத்தில் இவ்வாறு சேகரிக்கப்படும் வருமானம், வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் காண்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிக்கூற்றுக்களுடன் வருமானக் கணக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தர், வருமானக் கணக்களிப்பு உத்தியோகத்தர் எனப் பெயரிடப்பட்டிராமையால் அத்தகைய கணக்கொன்றைச் சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடு இல்லை. | வருமானக் கணக்கொன்றை சமர்ப்பிப்பதில் இருந்து தவித்துக் கொள்ளல் வேண்டும் | கருத்துரைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| சேவையை விட்டு விலகிச்சென்ற உத்தியோகத்தர் களிடம் இருந்தும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்தும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்த முறையே ரூபா 120,023 தொகையும் ரூபா 273,045 தொகையுமான கடன் மீதிகள் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதிகள் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சேவையை விட்டு விலகிச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதித் தொகையான ரூபா 120,023 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. ஓய்வுபெற்ற ஓர் உத்தியோகத்தரின் கடன் மீதி ரூபா 155,493 தொகை இது வரையில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br><br>ஓய்வுபெற்றுச் சென்ற மற்றைய உத்தியோகத்தர் ஓய்வூதிய விதிமுறைக் கோவையின் 12 ஆம் பிரிவின் கீழ் ஓய்வுபெற இடமளிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 117,552 தொகையான கடன் தொகை அவருக்கு எதிராக உள்ள வழக்கின் தீர்ப்புப் பெறப்பட்டமை அடுத்து தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாதாந்த கணக்குப் பொழிப்பின் படி, திறைரேிக் கட்டுநிதிப் பெறுவனவுகள் ரூபா 1,412,400,000 தொகையான போதிலும் நிதிச் செயலாற்றல் அறிக்கையின் படி, இது ரூபா 1,327,400,000 தொகையாகக் | திறைசேரிக் கட்டுநிதி சரியாகக் காண்பிக்கப்பட வேண்டும். | அரச கணக்குகள் திணைக்களத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் படி, நிதிச் செயலாற்றல் கூற்றில் அனுப்பப்பட்டவையைக் காண்பிப்பதற்காக உப தலைப்பு ஒன்று இன்மையால் திறைசேரிக்கு மீள அனுப்பிவைக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| காண்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதத்தின் மாதாந்தப் பொழிப்பில் ரூபா 85,000,000 ஆக அனுப்பிவைக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் அனுப்பிவைக்கப்பட்டவற்றின் கீழ் குறிப்பிடப்பட்டிராத கட்டுநிதி மீதிகளில் குறைவாகக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக இவ்வேறுபாடு ஏற்பட்டிருந்தது. | | பணம், கட்டுநிதிப் பெறுவனவுகளில் இருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | போதிய அறிவின்றி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததன் காரணமாக 13 செலவின விடயங்களிற்கு உரித்தான ரூபா 523,173,407 கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் 40 சதவீதத்தில் இருந்து 94 சதவீதம் வரையான வீச்சில் எஞ்சியிருந்தது. | நிதியைச் சாதுரியமாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 40 சதவீதமான சேமிப்புகள் நிலவிய 13 விடயங்களின் சேமிப்பு ரூபா 523,173,407 ஆகக் காணப்பட்டது. |
| (ஆ) | போதிய அறிவின்றி மதிப்பீ:டுகள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக மதிப்பீட்டின் பெறுமதியில் 35 சதவீதத்தில் இருந்து 325 சதவீதம் வரையான வீச்சில் ஏற்பாட்டுச் செலவின விடயங்களிற்கு இடையே மாற்றப்பட்டிருந்து. | மதிப்பீடு சரியான முறையில் தயாரிக்கப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய செலவினங்களை எதிர்பார்த்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக நிலைமைகளைக் கருத்திற்கொண்டு எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் ஏற்பட்டிராமை மற்றும் இவ் அமைச்சிற்கு உரித்தான செயற்பாடு மற்றும் அச் செயற்பாடுகளின் மூலம் ஏற்படக்கூடிய தேவைப்பாடுகளின் அடிப்படையில் திறைசேரியின் முறையான அங்கீகாரத்துடன் இவ் ஏற்பாடு மாற்றப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| தேசிய இயற்கை இடர் காப்புறுதித் திட்ட முறையின் கீழ் காப்புறுதி நலன் வழங்கப்படுவதற்காக இடர் தாக்கங்கள் தொடர்பில் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய சகல விபரங்கள் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினூடாக தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்குப் பதிலாக உரிய மதிப்பீட்டு அறிக்கையும் ஏனைய சகல விபரங்களும் உரிய மாவட்டச் செயலாளர்களால் நேரடியாக தேசிய காப்புறுதிப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் எனவும் அத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்தால் குறித்த காப்புறுதி நலன்கள் விடுவிப்புகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் 2017 யூலை 26 ஆம் திகதிய் 03/2016(II) ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக இயற்கையான இடர்களிற்காக நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பாக இடர் முகாமைத்துவ அமைச்சின் நோக்கெல்லை வரையறுக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வரிசை அமைச்சின் செயற்பாடுகள் நிச்சயிக்கப்பட வேண்டியதுடன் இது தொடர்பாக கட்டுப்பாட்டு முறைமை ஒன்று நெறிப்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை |

### 3.2 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது அமைச்சால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர்த் தாங்கி, நீர்ப் பம்பி மற்றும் தாபோலீன் சீட் போன்ற மனுக் கோரல் நடைமுறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது தேசிய போட்டி அடிப்படையில் மனுக் கோரப்பட்டிராது, செயலாற்றல் பிணை ஒன்று பெறப்படாது ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு | கொள்வனவு நடைமுறை முறையாகப் பின்பற்றப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் முதல் மாதங்களில் ஏற்பட்ட இடர் நிலைகளின் காரணமாக இக் கொள்வனவுத் திட்டத்தின் படி, குறித்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. வெள்ள இடர் நிலையை அடுத்து அக் குடும்பங்களுக்கு குடிநீரைப் பெறும் கிணறுகளைச் சுத்திகரிக்கும் செயற்பாடு இலங்கை இராணுவ மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தாமதமாகியிருந்ததன் காரணமாக கொள்வனவு நடைமுறை தாமதமடைந்திருந்தமை போன்ற பொதுவான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | கடற்படை உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இடர் நிவாரண சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்டிராத 175 நீர்ப் பம்பிகள் மற்றும் 2500 தாபோல் சீட்களிற்கான கொடுப்பனவுகளிற்காக வழங்குனர்களிற்கு வரையப்பட்டிருந்த ரூபா 21,439,737 தொகையான மற்றும் ரூபா 24,987,000 தொகையான காசோலைகள் கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | | 2019 ஆம் ஆண்டிற்காக குறை நிரப்பொன்றின் மூலம் ஏற்பாட்டு எல்லை வரையறுக்கப்பட்டமை தொடர்பான முன் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தமையால் இப் பொருட்களிற்காக கட்டளைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் பொருட்கள் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக காசோலைகள் வழங்கப்படாது வைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சகல பொருட்களும் கிடைக்கப்பெற்றதை அடுத்து காசோலைகள் விடுவிக்கப்பட்டிருந்தன. |
| (இ) | 1000 லீட்டர் நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்யப்படுகையில் அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 3.2 ஆம் பிரிவின் படி, தேசிய போட்டித் தன்மையில் மனுக் கோரப்பட்டிருக்கவில்லை. | வறட்சியால் ஏற்படும் இடர் தொடர்பாக முன்கூட்டியே ஆயத்தமானதால் கொள்வனவு நடைமுறைக்கு இணங்க கொள்வனவு மேற்கொள்ளப்படலாம். | சந்தையில் நீர்த் தாங்கி வழங்கப்படுவதற்காக வரையறுக்கப்பட்ட வழங்குனர்களே உள்ளமையாலும், முன்னர் நிலவிய பாரிய வறட்சி காரணமாக உடனடியாக நீர்த்தாங்கிகள் கொள்வனவு செய்துதருமாறு மாவட்டச் செயலாளர்களால் கோரிக்கை விடுத்திருந்தமையால் சந்தையில் உள்ள 07 வழங்குனர்களிடம் இருந்து வரையறுக்கப்பட்ட போட்டி மனுக்களை அடிப்படையாகக் கொண்டு விலைகள் கோரப்பட்டிருந்தன. |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை மாவட்டத்தின் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2017 ஆம் ஆண்டின் போது நேர்ந்த வெள்ளம், மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாயம் காரணமாக அகற்றுவதற்காக இனங்காணப்பட்டிருந்த 1,444 குடும்பங்களில் 699 குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படுவதற்காக 2017 ஆம் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 624.39 மில்லியன் தொகை இடர் முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாடுகளில் களுத்துறை மாவட்டச் செயலாளரால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அமைச்சால் வழங்கப்பட்டிருந்த வழிகாட்டலின் படி, மீள்குடியேற்ற நலன்பெறுனர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவர்களை மீளக் குடியமர்த்தும் மாற்றுச் சந்தர்ப்பங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு குறித்த காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. குறித்த நலன்பெறுனர்களின் பட்டியல் 07 நாட்கள் பொது மக்களிற்காக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பொதுமக்களிற்கான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்கக் காணியில், நலன்பெறுனர்களிடம் இருந்த காணியில் மற்றும் அரசாங்க நிதி உதவியில் நலன்பெறுனர்கள் கொள்வனவு செய்த காணி ஒன்றில் அரசாங்க நிதி உதவிகளில் நிர்மாணிக்கப்படுவதற்கு வழங்கப்பட்ட ரூபா 121.20 மில்லியன் தொகையில் ரூபா 33.40 மில்லியன் தொகை செலவிட்டு நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த | மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாயம் காரணமாக அகற்றுவதற்காக இனங்காணப்பட்டிருந்த குடும்பங்களை அகற்றும் பணிகள் உடனடியாக மேற்கொள்வதற்காகவும் ஏற்பாடுகள் குறித்த செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமை. | மண்சரிவு அபாய வலயங்களில் வாழ்ந்த மக்களை மீளக் குடியமர்த்தப்படுவதற்காக மண்சரிவு அபாயம் அற்ற குடியிருப்பிற்கு ஏற்ற காணிகள் அம் மாவட்டங்களில் தேடிக்கொள்வது மேலதிகப் பணியாகியிருந்தது. மேலும் மண்சரிவு அபாயத்தை எதிர்நோக்கிய காணிகளில் உள்ள மக்களை அகற்றுவதற்கு ஊக்குவித்து தேர்ந்தெடுக்கப்பட்ட காணிகளில் மீளக் குடியமர்த்துவது சவாலான இலக்காகக் காணப்பட்டது. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நலன்களைப் பயன்படுத்துவதில் பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வது நடைமுறைச் சாத்தியமற்றதாகக் காணப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | 167 வீடுகளிற்கு 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய வரையிலும் அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இரத்தினபுரி மாவட்டத்தின் அஹெலியகொட பிரதேச செயலாளர் பிரிவில் இடருடனான பிரதேசங்களில் வாழும் 312 குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் 150 நலனாளிகளுக்காக மாத்திரமே வீடுகள் நிர்மாணிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 97 நலனாளிகள் மீள்குடியேற்றத்திற்காக 02 காணிகள் இனங்காணப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2019 மார்ச் 28 ஆம் திகதி வரையிலும் அந் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திருக்கவில்லை. அயகம பிரதேச செயலாளர் பிரிவில் மீள் குடியிருப்பிற்காக 264 குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் காணி இனங்காணப்பட்டு 151 குடும்பங்களிற்காக மாத்திரமே வீடுகளின் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமாகிய 2019 ஏப்ரல் 02 ஆம் திகதி வரையில் எஞ்சிய 113 குடும்பங்களிற்கான காணி இனங்காணல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அபாயமான பகுதிகளில் மக்களுக்காக உடனடியாக வசதிகளை ஏற்படுத்துவதற்காக முறையான நடைமுறையின் தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரையில் கண்டி மாவட்டத்தின் அதிகூடிய இடர் வலயங்களில் வாழும் 2,098 தோட்டக் குடும்பங்கள் மற்றும் தோட்டமற்ற குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அக் குடும்பங்களிற்கிடையே நிலையான வீட்டு நிர்மாணிப்புச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்காக இனங்காணப்பட்ட 328 குடும்பங்களிற்காக மீளாய்வாண்டின் போது அமைச்சினூடாக 06 பிரதேச செயலகங்களிற்கு ரூபா 93.30 | இடருடனான பிரதேசத்தில் உள்ள மக்களிற்காக உடனடியாக வசதிகள் வழங்கப்படுவதற்காக முறையான நடவடிக்கையின் தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

மில்லியன் தொகையான ஏற்பாடு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 50.80 மில்லியன் தொகையான ஏற்பாடு அமைச்சிற்கு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் அறிக்கையின் படி, தொலுவ பிரதேச செயலகப் பிரிவில் அதிகூடிய இடருடனான தோட்டமற்ற 24 வீடுகள் மற்றும் 25 தோட்ட வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்காகத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 மார்ச் 22 ஆம் திகதி வரையிலும் கூடிய இடர் பிரதேசங்களில் இருந்து அகற்றப்பட்டு எந்த ஒரு குடும்பமும் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கவில்லை.

இதற்காக 2016 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட லோராவத்த எனும் பெயரிலான அரச காணியில் உள்ள நபர்களை மீளக் குடியமர்த்துவது உகந்ததென கட்டிட ஆராய்ச்சி அமைச்சால் பரஸ்பர பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தமை காரணமாகியிருந்தது. கங்க இஹல கோரலே பிரதேசச் செயலகத்தில் 2016 ஆம் ஆண்டின் போது குருந்துவத்த பகுதியில் நேர்ந்த மண்சரிவு நிலைகள் காரணமாக கூடிய இடர் வலயமாக இனங்காணப்பட்ட பெரவில பகுதியில் 162 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்காக குருந்துவத்த நகரத்திற்கு அருகாமையில் 25 ஏக்கர் தனியார் காணி ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளிற்காக ரூபா 35.40 மில்லியன் ஏற்பாடு கண்டி மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதன் படி, வீடமைப்பிற்காக 153 குடும்பங்களிற்காக 2018 நவம்பர் 16 ஆம் திகதி ரூபா 30.60 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

எவ்வாறெனினும், 2019 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையிலும் இதில் 125

| | | |
|---|---|---|
| | குடும்பங்கள் எந்தவித வீடுகளும் நிர்மாணிக்கப்படாது கூடிய இடர் வலயங்களில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. உடுநுவர பிரதேசச் செயலகப் பிரிவில் மண்சரிவு கூடிய இடர் வலயங்களில் வாழும் 99 தோட்டக் குடும்பங்கள் மற்றும் 13 தோட்டமற்ற குடும்பங்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் மீள் குடியேற்ற நடவடிக்கைகளிற்காக ரூபா 30.80 மில்லியன் தொகையான ஏற்பாடு கண்டி மாவட்டச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அத் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |
| (ஈ) | இடர் உதவிச் சேவைகள் நிலையத்தினால் இடர் உதவிச் சேவை நடவடிக்கைகளிற்காக நுவரெலிய மாவட்ட அலுவலகத்திற்கு 2016 ஆம் 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்டிருந்த 40 நீர்த்தாங்கிகளும் 02 நீர் பீப்பாக்களும் உரிய அலுவலகங்களிற்கு வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொத்மலை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நீர்த்தாங்கி காணாமற்போயிருந்தது. | நீர்த்தாங்கி வழங்கப்பட்ட செயற்பாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டு முறைப்படி பேணப்படுவதற்காக நீர்த் தாங்கிகளிற்கான பாதுகாப்பு வழங்கப்படுவதற்காக ஆக்கபூர்வமான முறையொன்று மேற்கொள்ளப்படுவதற்காக செயற்பட வேண்டும். |
| (உ) | வறட்சி இடர் உதவி சேவை நடவடிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | |
| (i) | கூடிய வறட்சியான காலநிலை காரணமாக தாக்கத்திற்கு உட்பட்டிருந்த மக்களிற்கு உதவிவழங்கப்படுவதற்காக வறட்சி மானியங்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்படுவதற்காக 14 மாவட்டங்களில் 451,224 நலன்பெறுனர்களி இனங்காணப்பட்டிருந்தனர். நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக முற்பணமாக 2018 செப்தெம்பர் 25 | வறட்சி மானியங்கள் பெறவேண்டிய குடும்பங்கள் நிச்சயிக்கப்படுவதற்காக அமைச்சு தலையிட்டிருந்தமையால் ஆராய்ச்சி நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதன் மூலம் இது தொடர்பாக பின் ஆய்வுகள் மேற்கொள்ள முடியும்.<br><br>இதன் படி, நிதியை ஆக்கபூர்வமாகப் |

ஆம் திகதி ரூபா 700 மில்லியன் தொகையான ஏற்பாடு மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், 2018 ஒக்டோபர் 09 ஆம் திகதி இடர் முகாமைத்துவ அமைச்சுச் செயலாளரின் அறிவுறுத்தலில் அவ் ஏற்பாடு மீள ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆமைச்சரவைப் பத்திரத்தின் படி, உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் II ஆம் கட்டம் 2018 செப்தெம்பர் 20 ஆம் திகதி முதல் மூன்று மாத காலத்திற்காக மாதாந்தம் மானியங்கள் வழங்கப்பட வேண்டியிருந்த பொதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முதல் தவணைக்கு உரித்தான மானியம் வழங்கப்பட்டு முடிவுற்றிருக்கவில்லை.

(ii) பிரதேச செயலகங்களில் நிர்வாகச் செலவினங்களிற்காக ஒரு பொதிக்காக ரூபா 25 இற்காக மானியப் பொதிகளைப் பொதியிடும் ஒரு பொலிசெக் பொதிக்காக ரூபா 35 தொகையுமாக மேலதிகமான ஒரு பொதிக்காக ரூபா 60 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டின் போது 14 மாவட்டச் செயலகக் காரியாலயங்களிற்காக ரூபா 9,640,718 தொகை நிர்வாகச் செலவினமாகவும் ஒரு பொலிசெப் பொதிக்காக ரூபா 14,495,000 தொகையுமாக ரூபா 24,135,718 கூட்டுத்தொகையான தொகை சிக்கனமற்ற செலவினம் எனவும் அத் தொகை மானியமாக நலனாளிகளிற்கு வழங்கப்படும் இயலுமை இருந்ததெனவும் கண்டறியப்பட்டது.

iii. அநுராதபுர மாவட்டத்தின் 123,058 விவசாயக் குடும்பங்களிற்காக வறட்சி மானியம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன்

பயன்படுத்துவதன் மூலம் உபாதைகளிற்கு உட்பட்ட குடும்பங்களிற்கு உயர் மானியங்களை வழங்குவதற்கு இயலுமாக இருந்தது.

.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

- கலென்பிந்துனுவெவ மற்றும் தலாவ பிரதேச செயலகப் பிரிவில் மானியங்கள் வழங்கப்பட வேண்டிய குடும்பங்கள் முறையே 1050 ஆகவும் 1971 ஆகவும் இனங்காணப்பட்டிருந்த போதிலும், முறையே 11,017 மற்றும் 11,084 குடும்பங்களிற்காக மானியங்கள் செலுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

- தலாவ பிரதேச செயலகப் பிரிவில் 04 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளின் நலனாளிகளின் பெயர்ப் பதிவேடு அங்கீகாரம் இன்றி திருத்தப்பட்டு வேறு 137 பெயர்கள் உள்ளடக்கப்பட்டு மானியங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

- கஹடகஸ் திகிலிய, நொச்சியாகம, தலாவ பிரதேச செயலகப் பிரிவுகள் 03 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது எழுந்த மாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 03 கிராம சேவை வலயங்களில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது திருமணமான பிள்ளைகளுடன் ஒரு குடும்ப ற்கு அலகொன்றாக தாய்.்.தந்தை உயிர்வாழ்ந்த போதிலும், மானியங்கள் பெறப்படுவதற்காக அக் குடும்பங்கள், இரு அலகுகளாகக் குறிப்பிடப்பட்டு 259 குடும்பங்கள் மானியங்களைப் பெற்றிருந்தனர்.

| | | |
|---|---|---|
| (ஊ) | இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 8 ஆம் பந்தியின் 2(அ) பிரகாரம் | தேசிய இடர் 2018-2030 வரையான முகாமைத்துவத் திட்ட காலப்பகுதிக்காக இடர் நடவடிக்கைகள் முகாமைத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சால் தேசிய இடர் முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். 2018-2030 வரையான காலப்பகுதிக்காக புதிய திட்டம் ஒன்று தயாரிப்பதற்கான நடவடிக்கைகளிற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 02 மில்லியன் இடர் முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | பூர்த்திசெய்யப்பட வேண்டும். | நிலையத்தினால் தேசிய இடர் முகாமமைத்துவத் திட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. |
| (எ) | சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செந்தாய் கட்டமைப்பின் படி, இடரைக் குறைப்பதற்கான ஓர் திட்டம் தயாரிக்கப்படுவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தினூடாக 2015 ஆம் ஆண்டின் போது இடர் முகாமைத்துவ நிலையத்திற்கு ரூபா 1,300,000 வழங்கப்பட்டிருந்தது. அத் தொகையில் 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நிலையத்தால் ரூபா 318,582 செலவிடப்பட்டிருந்த போதிலும் அத்தகைய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேற்குறித்த திட்டத்தைத் தயாரிக்கும் நடவடிக்கைகள் அமைச்சால் மேற்கொள்ளப்பட வேண்டியதாக நிலையத்தால் முன்னைய ஆண்டின் போது கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சினாலும் அத்தகைய திட்டம் ஒன்று தயாரிக்கப்படுவதற்கு 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செந்தாய் கட்டமைப்பின் படி, இடர் அபாயத்தைக் குறைப்பதற்கான ஓர் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இது வரையில் உலகளாவிய ரீதியாக ஏற்படுத்தப்பட்டிருந்த இணக்கப்பாடுகளின் படி, அமைச்சினால் எமது நாட்டிற்கு உரித்தான நிலவர அறிக்கை மற்றும் ஆயத்த திட்டம் தயாரிக்கப்பட்டு ஐக்கிய நாடுகளின் இடர் குறைப்பு ஒருங்கிணைப்பு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, உலகளாவிய 7 இலக்குகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 4. நிலையான அபிவிருத்தி இலக்குகள் எய்தப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படும்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் சகல அரச நிறுவகத்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கு உரித்தாக இடர் முகாமைத்துவ அமைச்சால் தமது நோக்கெல்லையின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பில் செயற்பட்டிருக்கவில்லை. | நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ பிரகாரம் அமைச்சு செயற்பட வேண்டும். | அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவக உத்தியோகத்தர்கள் நிலையான அபிவிருத்தி இலக்கை எய்துவதற்காக அறிவூட்டல் செயலமர்வொன்றையும் இதற்குத் தேவையான குறியீடுகளைத் தயாரிப்பதற்கான ஒரு செயலமர்வொன்று நிலையான அபிவிருத்தி செயலகத்தின் வளப் பங்களிப்பில் நடாத்தப்பட்டது. சென்தாய்க் கட்டமைப்பின் கீழ் 07 உலகளாவிய இலக்குகளுக்கு இணங்க 07 தேசிய இலக்குகள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. |

## 5. நல்லாட்சி

### 5.1 பொதுமக்களுக்கு கடமையாற்றல்

#### 5.1.1 இடர் நிவாரணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| திடீர் இடர் நிலைமையில் விபத்திற்கு உள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உதவிகளைச் சேர்க்கும் நோக்கில் திறக்கப்பட்ட கணக்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவியாளர்களிடம் இருந்து 2018 ஆகஸ்ட் 06 ஆம் திகதி வரையில் ரூபா 294,453,005 தொகை உதவியாகப் பெறப்பட்டிருந்த போதிலும் அந் நிதியில் உதவியாளர்களில் நோக்கை எய்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந் நிதியில் சீனக் குடியரசிடம் இருந்து பெறப்பட்டிருந்த ஐ.அ ஒரு மில்லியன் டொலரும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | உதவியாளர்களின் நோக்கம் எய்தப்படும் வகையில் நன்கொடைத் தொகை பயன்படுத்தப்பட வேண்டும். | திடீர் இடர் நிலைமையால் விபத்திற்கு உள்ளான மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக உதவியாளர்களால் பணம் செலவுவைக்கப்பட்ட 7040171 ஆம் இலக்க கணக்கில் நிலவிய நிதி வெள்ளம், மண்சரிவு மற்றும் மணிசரிவு கூடுதலான அபாயம் காரணமாக தமது குடியிருப்புகளில் இருந்து அகற்றப்பட்ட மக்களை மீளக் குடியமர்த்தும் வீடமைப்புச் செயற்திட்டத்திற்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br><br>இக் கணக்கில் சீனக் குடியரசிடம் இருந்து 2018 யூலை 24 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற ஐ.அ. டொலர் 1.00 மில்லியன் தொகை, இடர் குறைப்பு செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படுவதற்கு அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் இதற்காக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் |

| | | |
|---|---|---|
| | | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் ஏற்ற செயற்திட்டம் இனங்காணப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.<br><br>கணக்கின் எஞ்சிய தொகை பின்வரும் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படுவதற்காக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.<br><br>i. பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடர் நிவாரண சேவை உத்தியோகத்தர்களுக்கும் அப் பிரிவுகளில் உள்ள 9000 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்காக ஒரு ரெயின்கோட், பூட்ஸ் மற்றும் மீள் மின்னூட்டத்தக்க மின்பந்தம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படுவதற்கு.<br><br>ii. மாவட்ட இடர் முகாமைத்துவ அலகொன்றிற்காக 300 செயின்சோ கொள்வனவு செய்யப்படுவதற்கு<br><br>iii. 100 திறப்பணங்கள் கொள்வனவு செய்யப்படுவதற்கு |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்களிப்பு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 113 ஆன போதிலும் உள்ளபடியான பதவியணி 78 ஆகக் காணப்பட்டமையால் பதவியணி வெற்றிடங்கள் 35 ஆகக் காணப்பட்டன. | பதவியணி சேர்க்கப்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | மேற்குறித்த வெற்றிடங்களில் 17 வெற்றிடங்கள் பட்டதாரிகள், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் காணப்பட்டதுடன் குறித்த வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு அரச நிர்வாகப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையில் 02 சாரதிகளின் வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் 04 அலுவலக உதவியாளர்கள் ஆட்சேர்க்கப்படுவதற்காக நேர்முகத் தேர்விற்கு நாள் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆரசாங்க |

முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்கள் 03 இற்காகவும், உதவி செயலாளர் வெற்றிடம் 01 இற்காகவும், உரிய போட்டிப் பரீட்சைகளால் சேர்க்கப்பட்டதன் பின்னர் இணைக்கடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.